உ

பாலு சரவண சர்மா
பழைய தாம்பரம் கிராம புரோகிதர், ஜோதிடர்

# விநாயகர் சதுர்த்தி பூஜை

முழுமுதற்கடவுளான கணபதிக்கு சிறப்பான நாளான இது விநாயகர் சதுர்த்தி என்று அழைக்கப்பட்டு விரதம் இருந்து வழிபடும் நன்னாளாகும்.

களிமண் பிள்ளையாரை குடை, எருக்கன் மாலைகளால் அலங்கரித்து பிடித்தமான அருகம் புல்லால் அர்ச்சனை செய்து, பிடித்தமான சுண்டல், கொழுகட்டை, அவல், பொரி, கடலை, நாவல், விளாம்பழம், கரும்புத் துண்டுகள் என பிடித்தமான உணவைகளை படைத்து, பாடல்களால் குடும்பத்தினருடன் ஸ்தோத்திரம் செய்து மனதில் இறைவனை வேண்டி வழிபட்டு பின்னர் நீர்நிலைகளில் கரைத்தலே விநாயகர் சதுர்த்தியாகும்

சங்கடங்களை நீக்கி மேண்மை அடையச்செய்யும் இந்த விரதம் பிரஹஸ்பதியால் கூறப்பட்டு தருமபுத்திரர்களால் அனுஷ்டிக்கப்பட்ட உன்னதமான விரதமாகும்.

சந்திர மாதமான பாத்திரபத மாதத்தில் அமாவாசை அடுத்த நான்காம் நாள் வளர்பிறையில் வரும் சதுர்த்தி திதி ஸித்தி கணபதி விரதம் என்றும் விநாயக சதுர்த்தி என்றும் வழங்கப்படுகிறது.
இந்த விரதம் மாதந்தோறும் வரும் சுக்ல சதுர்த்திகளில் இதுவே முதன்மையானதாகும்.

விநாயகர் சதுர்த்தி 11.9.2010 சனிக்கிழமை அன்று திருக்கணிதப்படி சதுர்த்தி திதியில் பஞ்சமி தொட்டுக் கொண்டிருப்பதும் பகலில் சித்திரை நட்சத்திரம் அபாரண காலத்தில்(படையல் போடும் காலம்) வியாபித்திருந்து, சனிக்கிழமையில் வருகை தந்துள்ளது மிகவும் சிறப்பானதாகும்.

சனிக்கிழமையில் சதுர்த்தி வந்ததால் ராகு, கேது தோஷ வழிபாட்டிற்கு மிகவும் உகந்தநாளாகும். ராகு, கேது தோஷம் உள்ளவர்கள் அன்றைய தினம் உயிரியல் பூங்காவில் அல்லது கோவிலில் உள்ள யானையின் பராமரிப்பு செலவை தானம் செய்யலாம் அல்லது யாணையின் உணவிற்கு தேவையான பொருட்களை தானம் செய்து வழிபடுதல் நன்று

வழிபாட்டு நேரம்

விநாயகர் சதுர்த்தி அன்று(11.9.2010) காலை 8 மணிக்கு மேல் 9 மணிக்கு முன்னர் இலக்னத்தில் சந்திரன் , லக்னம் சித்திரை நட்சத்திரத்தின் வழியாக பயணிக்கும் காலம் வழிபாட்டிற்கு மிகவும் உகந்த காலம் ஆகும். அந்த நேரத்தில் 7ஆம், 8ஆம் (அஷ்டம சுத்தி) இடம் சுத்தமாக இருப்பதால் இல்லறத்தில் தம்பதிகளுக்கிடையே ஒற்றுமை ஏற்பட்டு நன்மை கிட்டும், நோய்நீங்கி ஆயுள் விருத்தியடையும்.

மேற்படி நேரத்தில் வழிபட இயலாதவர்கள் 10:30 மணிக்கு மேல் 12 மணிக்கு முன்னதாக சுப ஹோரயில் வழிபடுதல் நன்று.

பச்சை களிமண்ணிலான பிள்ளையரை வழிபட்டு பின்னர் நீர்நிலைகளில் கரைப்பதே புனிதமானதாகும்.

நன்கு அறிந்த மொழியில் இறைவனை வழிபடுதலே நன்று அந்த வகையில் ஔவையார் அருளிய விநாயகர் அகவலை பாடி பிரார்த்தனை செய்வதே நன்மைபயக்கும்.

வழிபட்ட விநாயகரை முறையாக நமது கரங்களால் கரைத்தல் மிகவும் முக்கியமானதாகும்.

| | | | |
|---|---|---|---|
| லக்கினம் | துலாம் | 000:40:34 | சித்திரை / 3 |
| சந்திரன் | துலாம் | 002:04:54 | சித்திரை / 3 |
| சூரியன் | சிம்மம் | 024:16:57 | பூரம் / 4 |
| புதன் | சிம்மம் | 011:36:08 | மகம் / 4 |
| சுக்கிரன் | துலாம் | 007:49:26 | ஸ்வாதி / 1 |
| செவ்வாய் | துலாம் | 003:27:25 | சித்திரை / 4 |





**பாலு சரவண சர்மா**

பழைய தாம்பரம் பரம்பரை புரோகிதர்- ஜோதிடர்- பஞ்சாங்க கணிதர்

எண் 9, 4வது தெரு, கல்யாண் நகர், தாம்பரம்(மே), சென்னை 45

தொலைபேசி: 91 44 2226 1742, 91 98403 69677

மின்னஞ்சல்: prohithar@gmail.com இணையம்: www.prohithar.com